செய்தி வெளியீடு எண். 105 நாள்: 19.02.2018

**குழந்தை திருமணம் நடைபெறும் திருமண மண்டபங்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை**

திருவள்ளூர் மாவட்டம், 11.02.2018 அன்று எல்லாபுரம் ஒன்றியம், லட்சுபாலவாக்கத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில், தகவலின்படி நடைபெற இருந்த குழந்தை திருமணம் சமூக நலத்துறை மற்றும் காவல்துறை அலுவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஒவ்வொரு திருமண மண்டப உரிமையாளர்களும் தங்களது மண்டபத்தில் திருமணம் நடத்த வாடகைக்கு விடும்போது மணமகளுக்கு 18 வயதும் மணமகனுக்கு 21 வயதும் நிறைவடைந்ததை உரிய சான்றிதழ் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், நடைபெறும் திருமணம் குழந்தை திருமணம் எனத் தெரியவந்தால் சம்பந்தப்பட்ட திருமண மண்டபத்தின் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**